போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 1-9
ISSN :XXX-XXXX

# நாலடியார் உணர்த்தும் அறச்சிந்தனைகள்

த.லதா, உதவிப்பேராசிரியர்,
தொன்போஸ்கோ கல்லூரி, ஏலகிரி மலை,
திருப்பத்தூர் மாவட்டம், தமிழ்நாடு, 635853

**ABSTRACT**

Named for the virtue that influences the goals and intentions that make up the character of such a man, whether a man should live together in a community or stand alone and act as an individual. Virtue is the law of living an honest life. The ancient Tamils believed that by observing it he would get the present and the future. Virtue was not considered a principle by the Sangam Tamils and was considered a way of life by them. Virtue is a set of moral rules. Tamils deeply admired the natural norm. This natural norm is understood to be common to world innovation. It may be clarified by the notion that the morality of nature appears to be by divine power and that all nations are generally attacked and perpetuated. In this article we will look at the proud interior.

## ஆய்வுச்சுருக்கம்

ஒரு மனிதன் ஒரு சமூகத்தைச் சேர்ந்து வாழ்வதற்கும் அல்லது தனியே நின்று தனி மனிதனாக இயங்குவதற்கும் அத்தகைய மனிதனுடைய பண்பு நலனை உருவாக்கிக் கொள்ளும் குறிக்கோள்களுக்கும் நோக்கங்களுக்கும் செல்வாக்குகளுக்கும் ‘அறம்’ என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. நேர்மையான வாழ்க்கை வாழ்வதற்குரிய சட்டமாக அறம் விளங்குகின்றது. அவ்வறத்தைக் கடைப்பிடிப்பதனால் இம்மையும் மறுமையும் கிடைக்கும் எனப் பண்டைத் தமிழர் நம்பினர். அறம் என்பதைச் சங்ககால தமிழர் ஒரு கொள்கையாகவோ கோட்பாடாகவோ சமயமாகவோ கருதவில்லை. அதனை அவர்கள் வாழ்க்கை நெறியாகவே கருதினர். ஒழுக்க நெறிக்குரிய விதிமுறைகளின் தொகுப்பாகவே அறம் விளங்குகிறது.

தமிழர் இயற்கை நெறியையே அறமாகப் போற்றினர். இந்த இயற்கை நெறி உலகம் பொதுமைக்கும் பொதுவானதாக விளங்கியுள்ளது. அதனை ’இயற்கை நெறியாகிய அறம் இறையாற்றலால் தோன்றுவது, எல்லா நாட்டினராலும் பொதுவாகப் போற்றிக் காக்கப்படுவது என்றும் மாறாது நிலைத்து இருப்பது’ எனும் கருத்து தெளிவுபடுத்துகிறது எனலாம். பெருமை வாய்ந்த அறத்தினைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்

## திறவுச்சொற்கள்

1. கோது
2. குண்டுநீர்
3. ஆண்டை
4. துற்று
5. புறத்த

## முன்னுரை

தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 1-9
ISSN :XXX-XXXX

தமிழ் இலக்கியங்கள் நாம் வாழ வழிக்காட்டியாகும். சங்ககால இலக்கியங்கள் காலத்தினைக் காட்டும் கண்ணாடிகள் ஆகும். இலக்கியங்களின் நோக்கம் நீதியையுரைப்பது. மனித வாழ்க்கையை செம்மைப் படுத்துவது. நீதியுரைப்பதில் பதினெண் கீழ்கணக்கு நூல்கள் தான் சிறப்பிடம் பெறுகிறது.

சங்கம் மருவிய காலம் கி.பி.முன்றாம் நூற்றாண்டு சோழநாட்டையும் பாண்டிய நாட்டையும் களப்பிரர்கள் ஆட்சி செய்ததாக கருதப்படுகிறது. இவர்கள் காலத்தில் தமிழ் மொழி, தமிழ்ப்பண்பாடு. தமிழ்க்கலைகள் வளர்ச்சிக் குன்றியது. எனவே தமிழக வரலாற்றிலேயே இக்காலத்தினை இருண்ட காலம் என்பர். இக்காலப்பகுதியில் தான் சில நூல்கள் தோன்றின. சிலம்புஇ மணிமேகலை ஆகிய நூல்கள் தோன்றின. நீதி நூல்களும் தோன்றின.

"நாலடி நான்மணி நானாற்பது ஐந்தினை முப்
பால் கடுங்கோவை பழமொழி- மாமூலம்
இன்னிலை காஞ்சியோடு ஏலாதி என்பவே
கைந்நிலையாம் கீழ்க்கணக்கு"

பதினெண் கீழ்கணக்கு நூல்களில் முதலாவதாக வைத்துப் போற்றப்படுவது நாலடியார். இது நாலடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது. திருக்குறளைப்போன்றே வாழ்க்கைக்கு தேவையான அறம்இ பொருள், இன்பம் பற்றி எடுத்துரைக்கிறது.

**அறம் விளக்கம்**

ஒரு மனிதன் தனக்குள் உருவாக்கிக் கொள்ளும் நெறிகள், இறுதியாக வரையறுத்துக்கொண்ட நடத்தைகள் செய்யக்கூடிய செயல்கள், செய்யக் கூடாத செயல்கள் அனைத்தும் அடங்கிய ஒரு வழிகாட்டி தொகையே அறம் என்று சொல்லப்படுகிறது. தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் அறங்களை வழியுறுத்தி செல்கின்றன.

சிலப்பதிகாரம்,

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்"

என்கிறது. "பிறவி தோரும் மனிதனை பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம்" என்பது ஆண்மீக விளக்கம் ஆகும்.

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல" (குறள் 39).

என வள்ளுவர் கூறுகிறார்.

**அறம் செய்தல்**

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 1-9
ISSN :XXX-XXXX

எல்லா அறச் செயலிலும் முதன்மையான அறமாக விளங்குவது பிறருக்கு உணவு அளித்தலும் கொடை அளித்தலும் ஆகும். ஷ வறியவர்க்கு ஒன்று ஈவதே ஈகைஷ என வள்ளுவர் உரைப்பார். செல்வத்துப் பயன் ஈதலாகும் எனும் தமிழர் நெறி, கொடுத்து வாழும் வாழ்வியல் சிந்தனை நாலடியாரிலும் வெளிப்படுகிறது.

பெருமை மிக்க பிறவியே மானிடப்பிறவி ஆகும். இவ்வரிய பிறவியின் பயன் நல்லறம் செய்து வாழ்வதாகும். மனித உடல் ஒரு நாள் வலுவிழந்து சாறு பிழிந்தெடுத்த கரும்புச் சக்கைப் போலாகிவிடும். எனவே அறம் செய்து வாழ வேண்டும் என நாலடியார் இவ்வாறு

" அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
பெரும்பயனும் ஆற்றவே கொள்க் கரும்பூர்ந்த
சாறுபோல் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோல் போகும் உடம்பு" (நாலடி.34)

குறிப்பிடுகிறது. அரிய உடலைப் பெற்றதன் பயனாகப் புண்ணிய செயல்களை மிகுதியாக செய்து கொள்க. இந்த உடல் ஆலையில் இட்டு கரும்பினைச் சாறுத் தனியாகவும், சக்கையைத் தனியாகவும் பிரிப்பது போல் ஆகிவிடும். கரும்பிலிருந்து சாறு கிடைப்பது போல புண்ணியத்தால் வீடுபேறு அடையலாம். சக்கையான உடலை இங்கேயே கழித்துவிடலாம் என்கிறது நாலடியார்.

**அறத்தின் தன்மை**

பசுக்கள் வெவ்வேறான நிறங்களைக் கொண்டனவாயினும் அவை கறக்கும் பாலின் நிறம் வெவ்வேறான நிறத்தில் இருப்பதில்லை. அறம், பாலைப்போல ஒரே தன்மையுடையதாகும். இவ்வுலகத்தில் அறத்தைச் செய்யும் முறைகள் பசுக்களைப் போல் பலப்பல செயல்களாக வடிவுகொள்வதற்குரியன என நாலடியார்

" ஆவேறு உருவின வாயினும் ஆபயந்த
பால்வேறு உருவின அல்லவாம்- பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி - ஆ போல்
உருவு பலகொளல் ஈங்கு" **(நாலடி.**118**)**

இப்பாடலால் விளம்புகிறது. இங்கே நாம் ஆவின் உரு என்பதை பற்பல மதங்களாகவும் கொள்ளலாம். பலதரப்பட்ட நற்செயல்களையும் கூறலாம். உரு முக்கியமல்ல் அறமே அதன் தன்மையாகும் என அறத்தை விளக்குகிறது நாலடியார்.

**உயிர்க்கு அமையும் பயன் அறச்செயலே**

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 1-9
ISSN :XXX-XXXX

உயிர் கொண்டு வாழும் இந்த வாழ்வில் அறச்செயலைச் செய்வதே பயனாக அமைதல் வேண்டும். நாலடியார் தன் மனத்திடம் கூறுவதாக மனமே!இல்வாழ்வில் வைத்த பாசத்தைக் கைவிட மாட்டாய் ! தேடப்படும் பொருள் மக்களுக்கு உதவும் என்று வருந்தித் தேடி நீ எத்தனை காலம் வாழ்வாய்? சிறிய அளவாக இருப்பினும் செய்த அறச்செயல் அன்றி உயிர்க்கு அமையும் பயன் வேறு இல்லை, என்பதைக் கூறி அறத்தை வலியுறுத்துகிறது. இதனை,

"……………………..
சிறுவரையே யாயினும் செய்தநன் றல்லால்
உறுபயனோ இல்லை உயிர்க்கு " (நாலடி.130)

என்னும் பாடல் வரிகளால் அறியலாம்.

**வறியவர்க்கு வேண்டியதைக் கொடுங்கள்.**

மிகுதியான செல்வங்களைச் சேர்த்து வைத்துள்ள செல்வரே! உடலோடு கூடிய உயிரானது தம் வாழ்நாளுக்கு விதிக்கப்பட்ட அளவை மீறி வாழப்போவதில்லை. எமனிடமிருந்து யாரும் தப்ப முடியாது. அதனால்,

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே என்றும் (குறள் 33)
அன்றறிவாம் என்னாது அறம் செய்க (குறள் 36)

என்றும் கூறுகிறார்.

மழை பெய்யாமல் வறண்ட காலத்திலும் பாரியின் மகளிர் தம்மிடம் வந்து இரந்த பாணனுக்கு நீரையுடைய உலையுள் பொன்னை இட்டு அதனை உணவாய்த் கொடுத்தனர் எனும் செய்தியை

"மாரி யொன்றின்றி வறந்ததிருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு – நீருலையுள்
கொன்திறந்து கொண்டு புகாவாக நல்கினாள்
ஒன்றுறா முன்றிலோ இல் " (பழ. 171)

பழமொழி நானூறு எடுத்தியம்புவதும் குறிப்பிடத்தக்கதாகும். பாரிமகளிரின் இச்செயல் தம்மை நாடி வருபவர்க்கு இல்லையென்று கூறாமல் தம்மால் இயன்றதைத் தருதல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது.

நாலடியார் முற்றாத இளங்கருவையும் வெளிப்படுத்திக் குழந்தையைத் தாய் அலறுமாறு உயிர் பறிக்கப்படுவதாய் அந்த எமனின் வஞ்சத் தொழிலை உள்ளத்தில் எண்ணி வீடுபேறு அடைவதற்கு வழியாக விளங்கும் அறத்தை

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 1-9
ISSN :XXX-XXXX

இளமையிலேயே செய்யுங்கள் என்பதை

"ஆட்பார்த் துழலும் அருளில் கூற்றுண்மையால்
தோட்கோப்புக் காலத்தால் கொண்டுய்மின் - பீட்பிதுக்கிப்
பிள்ளையைத் தாய் அலறக் கோடலான் மற்றதன்
கள்ளம் கடைப்பிடித்தல் நன்று " (நாலடி.20)

இப்பாடல் வழி அறியலாம். இப்பிறவியில் செல்வத்தைப் பெருக்குவோம் என்று அதையே பெருக்கி கொண்டிருந்த மனமே! நாம் விரைவில் சாகமாட்டோம் என்றிருந்த மனமே!ஆயுள் நாட்கள் கழிந்துவிட்டது. இனி மறுமையின் பொருட்டு என்ன செய்து? (நாலடி.31) என்று கூறுவதன் மூலம் செல்வத்தைவிட அறத்தையே விரும்புதல் வேண்டும் என்கிறது நாலடியார்.

அதே போல் சுடுகாட்டில் எரிந்த தலையின் ஓடு, இறக்காமல் இருப்பவரைப் பார்த்து, இகழ்ச்சியாய்ச் சிரித்து, ஷஇந்த உடலின் இயல்பு இத்தகையது! எனவே அறத்தைக் கடைப்பிடியுங்கள்' என்று சொல்வது போல் விளங்குவதாக,

" போற்றி நெறி நின்மின் இற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து " (நாலடி.49:3-4)

மேற்கண்டவாறு பாடப்பட்டுள்ளது.

அதேபோல் இளமையிலேயே அறம் செய்தல் வேண்டும். பொருளையே தேடிக் கொண்டிருந்துவிட்டு இறுதிக்காலத்தில் அறம் செய்ய எண்ணி, அந்நிலையில் பேச நாக்கு எழாமல் ஷகைகாட்டும் பொன்னும் புளி விளங்காயாம்' எனக் கருதப்பட்டு மறுக்கப்படும் (நாலடி.328) என எடுத்துக்காட்டி அறத்தை இளமையிலேயே செய்ய வலியுறுத்துகிறது.

மேலும் ஒவ்வொரு நாளும் பிடி அரிசியாவது ஏழை மக்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்பதை

" இம்மி யரிசித் துணையானும் வைகலும்
நும்மில் இயைவ கொடுத்துண்முன் - உம்மைக்
கோடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்து
ஆடாஅ அடுப்பி னவர் " (நாலடி.94)

என்கிறது நாலடியார். அதாவது இவ்வுலகத்தில் தமக்கு என்று சமைக்காத அடுப்பையுடைய இரப்பவரை, முன்பிறவியில் தம்மிடம் இரந்த வர்க்குக் கொடாதவர் என்று சான்றோர் உரைப்பர். எனவே நாள்தோறும் உம்மிடம் உள்ள பொருள்களுள் இம்மி என்னும்

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 1-9
ISSN :XXX-XXXX

அளவைக் கொண்ட அரிசியின் அளவுள்ள பொருலையேனும் அறத்தின் பொருட்டாகத் தந்து பின் உண்ணுங்கள் என்று வலியுறுத்தப்படுவதைக் காணலாம்.

இங்கே ஒரு எச்சரிக்கையும் விடுக்கப்படுகிறது. முற்பிறவியில் பிறருக்குக் கொடுக்கும் அறத்தைச் செய்யாதவர்களே இப்பிறவியில் இரப்பவர்களாக விளங்குகிறார்கள் என்பதே அவ்வெச்சரிக்கை. இதன்மூலம் அறம் வலியிறுத்தப்படுகிறது. இங்கே “அறம் என்பது இயற்கையில் காணப்படும் நெறிமுறையோடு தொடர்புடையது, சமூகத்தில் எந்த அளவு அதன் வெளிப்பாடு உணரப்படுகிறதோ அந்த அளவு அதன் தொடர்பினைக் காணலாம். அறம் என்பது நீதிநெறியில் வாழும் நபரைக் குறிப்பதில்லை மாறாக நல்ல குணங்களைக் குறிக்கிறது. மக்கள் அதனுடைய வடிவக் கூறினைக் கடைப்பிடிப்பதோடு மட்டுமின்றி, அவர்கள் தம்மை உயர்த்திக் கொள்ளவும் இது உதவுகிறது ” எனும் கருத்து இங்கு நோக்கத்தக்கதாகும். அதாவது சங்க இலக்கியங்கள் ஈகையை மக்கள் விரும்பி செய்தமையை வெளிப்படுத்துகிறது. அதற்கடுத்த காலகட்ட இலக்கியங்கள் ஈகையை வலியுறுத்துவது அதன் தொழிற்படு களம், காலம், சூழல், தேவையை வெளிப்படுத்துவதாயுள்ளன. இந்நிலையில் நாலடியார் அறத்தின் பயனையும் எடுத்தியம்புகின்றது-

**அறத்தின் பயன்**

அறத்தால் புண்ணியம் உண்டாகும். ஆலம் விதையானது சுருங்கிய அளவுடையதாக இருந்தாலும் முளைத்துத் தழைத்துப் பெருகிய பின் பெரிய நிழலைத் தருவதைப் போன்று, ஒருவரால் செய்யப்படும் அறப்பயன் சிறிதாய் இருப்பினும், அறிவு ஒழுக்கங்களால் தகுந்தவரின் கையில் பொருந்துமானால், அந்த அறத்தின் பயன், வானம் சிறியது எனும்படி அவ்வளவு பெரிய புண்ணியமாகிடும். இதனை

“………………….அறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்” (நாலடி.38)

என இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. அதே போல் மற்றொரு பாடல் கையில் கிடைத்த பொருளை முதுமை காலத்தில் பயன்படுமென்று இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிராமல், இளமைப் பருவத்தில் அறம் செய்தவர், நடுநிலையுடைய அருள் அற்ற எமன் பார்த்தால் கட்டிக் கொண்டு போகின்ற வழி தப்பிப் புண்ணியவுலகம் செல்வர்(நலாடி.05)எனக் கூறுகிறது. ஒருவருக்கு மகிழ்ந்து அனிதாகக் கொடுக்கும் தொழிலுடன் பொருந்திய குணமுடைய மக்களுக்குத் துறக்க உலகத்துக் கதவுகள் மூடப்படாதனவாகும் என்பதை,

“ கொடையொடு பட்ட குணனுடைய மாந்தர்க்கு
அடையாவாம் ஆண்டைக் கதவு ” (நாலடி.10:3-4)

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 1-9
ISSN :XXX-XXXX

இவ்வரிகள் வெளிப்படுத்துகின்றன.

### வீடுபேறு அடைதல்

மறுமையின் பொருட்டு அறத்தைச் செய்தல் வேண்டும்(நாலடி.12) என்றும், இந்த உடல் தன் நிலையிலிருந்து மாறக் கூடியது ஆதலால், நல் அறிவுடையவராய் மறுமை இன்பத்துக்குக் காரணமான அறத்தை மயக்கம் இல்லாது செய்து துன்பமின்றி வாழுங்கள் (நாலடி.183) என்றும் அறத்தின் பயனைக் கூறுகிறது நாலடியார்.

### முக்குற்றம் நீக்கும்

“முற்றுற்றும் துற்றினை நாளும் அறஞ்செய்து
பிற்றுற்றுத் துற்றுவர் சான்றவர்- அத்துற்று
முக்குற்றம் நீக்கி முடியும் அளவெல்லாம்
துக்கத்துள் நீக்கி விடும்” (நாலடி.190)

இப்பாடல் முக்குற்றங்களையும் அறம் நீக்கிவிடும். அதாவது முதலில் உண்ண எடுக்கும் கவள உணவை நாள்தோறும் விருந்தினர் முதலியவர்க்குத் தந்து, மிகுதியான உணவை உண்பர் மேலோர். அப்படி உண்ணும் உணவெல்லாம் காம வெகுளி மயக்கம் என்ற மூன்று குற்றங்களையும் விலக்கி, உடம்பை விட்டு உயிர் நீங்கும் அளவில், துன்பத்துக்குக் காரணமான பிறப்பினின்றும் அந்த உயிரை ஒழித்துவிடும் என்கிறது நாலடியார். மேலும்

“எத்துணை யானும் இயைந்த அளவினால்
சிற்றறஞ் செய்தார் தலைப்படுவர்” (நாலடி.272: 1-2)

என்பதன் மூலம் எத்துணைச் சிறியதாய் இருந்தாலும், தமக்குப் பொருத்தமான அளவால் சிறிய ஈதல் அறத்தைச் செய்தவர் பிறவிப் பயனை அடைவர் என்றும் நாலடியார் குறிப்பிடுகிறது.

### அறம் செய்யாதவர் நிலை

அறம் செய்தால் புண்ணியமும், வீடுபேறும் கிடைக்கும் எனக் கூறும் நாலடியார், அறம் செய்யாமல் போனால் என்ன நிகழும் எனக் கூறி அறம் செய்தலை வலியுறுத்தியுள்ளது.

### பழியெனும் துன்பக் கடல்

ஒருவன் மிக்க செல்வம் அடைந்தபோது அறத்தைப் பின்னால் அறிந்து கொள்வோம் என்றிருப்போர், மற்றவர் பழிக்கும் துன்பக்கடலில் விழுந்து துன்பம் அடைவர் என்று குறிப்பிடுகிறது. இதனை,

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 1-9
ISSN :XXX-XXXX

“பெருஞ்செல்வம் எய்தியக்கால் பின்னறிதும் என்பார்
அழிந்தார் பழிகடலத் துள்” (நாலடி. 272:3-4)

எனும் பாடலடிகளால் உணர்த்துகிறது.

## அறம் செய்யாதவன் பொருளை இழந்தவனாவான்

ஒருவன் நல்ல உணவுகளை உண்ணாமலும், மதிப்பை நிலைக்கச் செய்யாமலும், பெருகும் உரையும் பாட்டுமாகிய புகழைச் செய்து கொள்ளாமலும், பெறுவதற்குரிய உறவினரின் வறுமைத் துன்பத்தை நீக்காமலும் வீணே தன் செல்வத்தைப் பாதுகாத்து வைத்திருப்பானேல், ஐயோ, அப்பொருளை அவன் இழந்தானென்று சான்றோரால் கருதப்படுவான் என்பதை

“உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் - கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல், அஆ
இழந்தான்என் றெண்ணப் படும் ” (நாலடி. 09)

எனக் கூறுகிறது. மற்றொரு பாடலில்

“மறுமை யறியாதா ராக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை” (நாலடி. 275:3-4)

இவ்வாறு பாடலடிகள் விளம்புகின்றன. அதாவது மறுமைப் பயனை அறியாத கீழ் மக்களின் செல்வத்தைவிடச் சான்றோரின் வறுமையே சிறந்ததாகும் என்கிறது நாலடியார். மேலும் சமைத்து உண்பது என்பது தமக்கு உள்ள பொருள் அளவால், தம்முடன் உறவு உடையவருக்கும் உறவு இல்லாதவர்க்கும், தாம் சமைத்ததைப் பகுத்துக் கொடுத்துப் பின் தாம் உண்பதாகும். அவ்வாறில்லாமல் தம்முடைய வீட்டின் கதவை மூடிக்கொண்டு தாமே உண்டு உயிர் வாழ்கின்ற கீழ்மக்களுக்கு மறுமைப் பயன் அடைய முடியாதபடி மேல் உலக கதவு மூடப்பட்டுவிடும் என்கிறது நாலடியார். இதனை

“ நட்டார்கும் நள்ளா தவர்க்கும் உளவரையால்
அட்டது பாத்துண்டல் அட்டுண்டல் - அட்டது”

“அடைத்திருந் துண்டொழுகும் ஆவதின் மாக்கட்கு
அடைக்குமாம் ஆண்டைக் கதவு” (நாலடி. 271)

இப்பாடலால் அறியமுடிகிறது. அடுத்தவருக்கு உணவிடாதவர் வீடுபேறு அடைய முடியாது எனத் தெளிவாகக் கூறுகிறது நாலடியார்.

போஸ்கோ இலக்கிய இதழ்
தொகுதி: 01 இதழ்: 01 ஜீலை2021 1-9
ISSN :XXX-XXXX

**முடிவுரை**

அறமாவது, உயிர்களுக்கு இதமாவன செய்தலும் சத்தியம் சொல்லுதலும், தானதருமங்களைச் செய்தலும் என்பதை நாலடியார் உரைக்கின்றது. இங்கே,"ஒரு செயலின் விளைவுகள் எந்த அளவு நன்மை தருகின்றன எந்த அளவு தீமை தருகின்றன என்பதை ஆராய்ந்து ஏற்படுத்துவதே விளைவுசார் கொள்கை. ஒரு செயல் பாதக விளைவுகளை விட சாதக விளைவுகளை மிகுதியாக ஏற்படுத்தினால் அது சரியானதாகக் கருதப்படுகின்றது. இத்தகைய கொள்கைகள் 18ஆம் நூற்றாண்டுத் தத்துவ அறிஞர்களால் ஆதரிக்கப்பட்டன. ஒரு செயலின் விளைவுகள் அதனைச் செய்கிறவனுக்குச் சாதகமாக அமைவது அறமாக ஏற்றுக்கொள்ளப்பட்டால் அது அறநிலைத் தன்முதன்மை நிலைஐநுவாஉையட நுபழளைஅஸ எனக்கூறுப்பட்டது. செயலின் விளைவுகள் அதைச்செய்கிறவனை விடப்பிறரக்குச் சாதகமாக அமைவது அறம் எனக் கொள்ளப்பட்டால் அது அறநிலைப் பிறர் முதன்மைநிலை. ஒரு செயலின் விளைவுகள் எல்லோருக்கும் சாதகமாக அமைதல் அறம் எனக் கொள்ளப்பட்டது",எனும் கருத்து நோக்கத்தக்கதாகும். இவ்வகையில் நாலடியார் பிறருக்கு உணவளித்துப் பகிர்ந்துண்ணல், அடுத்தவருக்கு ஈதல் எனும் அறம் கொடுப்பவர், பெறுபவர் எனும் இருவருக்கும் நலம் பயப்பதாய் விளங்குவதால் சிறந்த அறமாக விளங்குவதை உணர முடிகிறது.

**பார்வை நூல்கள்**

1. நாலடியார் பாலசுந்தரம்பிள்ளை தி.சு தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
   கழகம் திருநெல்வேலி-6 1968
2. பதினெண் கீழ்கணக்கும் தமிழர் வாழ்வும் தா.வி. சிதம்பரனார். அறிவுப் பதிப்பகம்
   சென்னை 2007
3. பிற்கால நீதிநூல்கள் வித்வான் என். சுப்பிரமணியன்.
4. திருக்குறள். ச. மெய்யப்பன் மணிவாசகர் நூலகம் சிதம்பரம் 1993
5. பழமொழி. புன்னைவனநாத முதலியார் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் திருநெல்வேலி-6 1967